ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2017.05.25

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - பெப்புருவரி 2017

### பொதுநோக்கு

2017இல் சுற்றுலா வருவாய்களில் ஏற்பட்ட மிதமான தன்மை மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களில் காணப்பட்ட மிதமான வளர்ச்சி என்பனவற்றின் விளைவாக விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையின் காரணமாக இலங்கையின் வெளிநாட்டுத் துறை தொடர்ந்தும் குறைவடைந்த நிலையில் காணப்பட்டது. ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியில் எரிபொருள் மற்றும் அரிசி என்பனவற்றின் உயர்ந்த இறக்குமதிகளின் முக்கிய காரணமாக பெப்புருவரியில் வர்த்தகப் பற்றாக்குறையில் கணிசமான விரிவொன்று அவதானிக்கப்பட்டது. ஓடுபாதையை செப்பனிடும் வேலைகளுக்காக பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையம் பகல் வேளையில் மூடப்பட்டிருந்தமையின் பகுதியளவு காரணமாக சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சி சுற்றுலாவிலிருந்தான வருகைகள் சிறிதளவில் வீழ்ச்சியடைய காரணமாயிற்று. பெப்புருவரியில் தொழிலாளர் பணவனுப்பல்களின் வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கும் கீழேயே காணப்பட்டது. மேலும், இம்மாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான குறிப்பிடத்தக்க வெளிப்பாய்ச்சல்களின் காரணமாக நிதியியல் கணக்குகள் மோசமாகப் பாதிக்கப்பட்டன. எனினும், இம்மாத காலப்பகுதீல் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டிற்குமான உட்பாய்ச்சல்களின் காரணமாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் சில வெளிநாட்டு முதலீடுகள் அவதானிக்கப்பட்டன.

மேம்பட்ட ஏற்றுமதிச் செயலாற்றம் மேம்பட்டமை பங்குப் பரிவர்த்தனையில் காணப்பட்ட முதலீடுகள், அரச பிணையங்கள் சந்தைக்கான உட்பாய்ச்சல்கள் அதேபோன்று நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் தொடர்பிலான ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் கொண்ட பெறுகைகள் மற்றும் ஐ.அ.டொலர் 450 மில்லியன் கொண்ட கூட்டுக் கடன் என்பனவற்றின் விளைவாக மூலதன வெளிப்பாய்ச்சல் மாற்றமடைந்தமை என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டுக் கணக்கு மீதான அழுத்தம் அடுத்துவந்த மாதங்களில் ஓரளவிற்குத் தளர்வடைந்தது.

### ஏற்றுமதிச் செயலாற்றம்

2017 பெப்புருவரியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2016 பெப்புருவரியின் ஐ.அ.டொலர் 892 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 868 மில்லியனுக்கு 2.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்தளவான கைத்தொழில் ஏற்றுமதிகளே முக்கிய காரணமாகும்.

மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 76 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017 பெப்புருவரியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 659 மில்லியனுக்கு 6.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான வருவாய்கள் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். 2017 பெப்புருவரியில் புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 396 மில்லியனுக்கு 14.5 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமையானது ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பனவற்றிற்கான ஆடை ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமையினைப் பிரதிபலிப்பதாக இருந்தது. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை; இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் என்பனவும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான குறைந்த வருவாய்களுக்குக் கணிசமாகப் பங்களித்தன. எனினும், பொறிகள் மற்றும் எந்திர துணைச் சாதனங்கள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் மேம்பட்ட செயலாற்றமொன்றினைக் காட்டின.

அதேவேளை, வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்து மூன்றாவது மாதமாக வளர்ச்சியடைந்து 2017 பெப்புருவரியில் ஐ.அ.டொலர் 205 மில்லியனுக்கு 12.5 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் பெறுமதி நியதிகளில் 12.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு வீழ்ச்சியடைந்தமைக்கிடையிலும் உயர்ந்த விலைகள் காணப்பட்டமையே காரணமாகும். 2017 பெப்புருவரியில் வாசனைத்திரவியங்களிலிருந்தான வருவாய்கள் 25.7 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியமைக்கு கராம்பு, சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரி என்பனவற்றின் உற்பத்தி அளவு குறைந்த விலைகளுக்கு மத்தியிலும் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமையே காரணமாகும். மேலும், 2017 பெப்புருவரியில் கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 27.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்கான கடலுணவு ஏற்றுமதிகளில் அவதானிக்கப்பட்ட 111.0 சதவீதம் கொண்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். எனினும், தேங்காய், சிறு வேளாண்மை உற்பத்திகள் மற்றும் காய்கறிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017 பெப்புருவரியில் வீழ்ச்சியடைந்தன.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முதல் இரண்டு மாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,733 மில்லியனாக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 3.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு புடவைகள் மற்றும் ஆடைகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை இரத்தினக்கற்கள், வைரங்கள், ஆபரணங்கள் மற்றும் இறப்பர் உற்பத்திகளின் குறைந்த ஏற்றுமதிகளே முக்கிய காரணமாகும். எனினும், பொறி மற்றும் எந்திரச் சாதனங்கள், தேயிலை மற்றும் வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதிகள் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் கணிசமாக அதிகரித்தன.

2017இன் முதல் இரண்டு மாத காலப்பகுதியில் இலங்கையின் வணிகப்பொருள் ஏற்றுமதிகளுக்கான முன்னணிச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 52 சதவீதத்திற்கு வகைகூறின.

## அட்டவணை 1: ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | பெப்புருவரி 2016 (அ) (ஐ.அ.டொ. மில்) | பெப்புருவரி 2017 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-பெப் 2016 (ஆ) (ஐ.அ.டொ. மில்) | சன-பெப் 2017 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில்கள் ஏற்றுமதிகள்** | **705.3** | **659.4** | **(6.5)** | **1,421.5** | **1,327.4** | **(6.6)** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 463.1 | 396.1 | (14.5) | 927.5 | 822.4 | (11.3) |
| அதில் ஆடைகள் | 436.9 | 371.0 | (15.1) | 878.5 | 776.2 | (11.6) |
| அச்சக இயந்திர உற்பத்திகள் | 0.4 | 2.6 | 549.2 | 2.3 | 7.3 | 212.5 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 24.5 | 37.6 | 53.4 | 45.2 | 63.6 | 40.7 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 18.5 | 27.2 | 47.3 | 47.1 | 56.7 | 20.4 |
| இறப்பர் உற்பத்திகள் | 60.2 | 64.8 | 7.7 | 131.5 | 122.8 | (6.6) |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணிகள் | 12.1 | 16.3 | 34.6 | 24.4 | 25.7 | 5.3 |
| இரசாயன உற்பத்திகள் | 10.4 | 10.3 | (0.6) | 20.6 | 21.3 | 3.1 |
| பிளாத்திக் மற்றும் உலோகப் பொருட்கள் | 5.6 | 5.1 | (9.5) | 11.5 | 9.7 | (15.7) |
| இரத்தினக் கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 24.7 | 22.6 | (8.5) | 55.3 | 44.4 | (19.8) |
| உணவு பானங்கள் மற்றும் புகையிலை | 34.4 | 23.7 | (31.2) | 60.0 | 45.7 | (23.8) |
| ஏனையவை | 51.5 | 53.1 | 3.1 | 96.1 | 107.9 | 12.3 |
| **2. வேளாண்மை ஏற்றமதிகள்** | **182.1** | **204.9** | **12.5** | **361.6** | **398.5** | **10.2** |
| தேயிலை | 101.0 | 113.9 | 12.8 | 200.4 | 215.5 | 7.5 |
| தேங்காய் | 28.2 | 27.2 | (3.7) | 52.7 | 54.5 | 3.4 |
| வாசனைத் திரவியம் | 20.1 | 25.3 | 25.7 | 42.9 | 55.7 | 30.0 |
| கடலுணவு | 14.7 | 18.8 | 27.3 | 30.0 | 37.0 | 23.5 |
| சிறுவேளாண்மை உற்பத்தகிள் | 9.3 | 8.6 | (7.8) | 18.8 | 15.9 | (15.8) |
| இறப்பர் | 3.3 | 5.6 | 71.7 | 6.7 | 10.6 | 58.0 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.1 | 3.7 | 20.1 | 5.9 | 5.8 | (2.1) |
| மரக்கறிகள் | 2.4 | 1.8 | (24.5) | 4.2 | 3.6 | (13.3) |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **4.2** | **3.6** | **(14.4)** | **7.1** | **6.6** | **(6.9)** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **891.6** | **867.8** | **(2.7)** | **1,790.2** | **1,732.5** | **(3.2)** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது.

**இறக்குமதிச் செயலாற்றம்**

2017 பெப்புருவரியில் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,611 மில்லியனாக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 11.9 சதவீதத்தினால் அதிகரித்து இறக்குமதிகளில் தொடர்ந்து ஐந்தாவது மாதமாக இரட்டை இலக்க வளர்ச்சியைக் காட்டியது. இடைநிலைப்பொருட்களின் மீது உறப்பட்ட உயர்ந்த செலவினம் இவ்வளர்ச்சிக்கு பெருமளவிற்குப் பங்களித்தது.

2017 பெப்புருவரியில் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 907 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 25.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு எரிபொருள் இறக்குமதிகளே வழிவகுத்தன. எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவினம் இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக ஐ.அ.டொலர் 355 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதிகள் மீதான உயர்ந்த செலவினம் தூண்டுதலாக விளங்கிய வேளையில் மசகெண்ணெய் மற்றும் நிலக்கரி என்பனவற்றின் இறக்குமதிகள் அதிகரித்தமைக்கு நாட்டில் நிலவிய வரட்சி நிலைமைகளின் விளைவாக வெப்பவலு உருவாக்கம் அதிகரித்தமையே காரணமாகும். உயர்வடைந்த பன்னாட்டு எண்ணெய் விலைகள் மற்றும் ரூபாவின் தேய்வு என்பனவும் எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவு அதிகரிப்பதற்குப் பங்களித்தது. மேலும், இரும்பு, உருக்கு மூலதாதுப் பொருட்கள் மற்றும் தங்கத்தின் இறக்குமதி மீதான செலவினமும் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதியில் உயர் வளர்ச்சி ஏற்படக் குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களித்தது. எனினும், 2017 பெப்புருவரியில் புடவை மற்றும் புடவைப்பொருட்களின் இறக்குமதிகள், புடவைகள் மற்றும் ஆடை ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு நிகரான வீதத்தில் 17.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

2017 பெப்புருவரியில் முதலீட்டுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 360 மில்லியான விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பொறிகள் மற்றும் கருவிகளின் இறக்குமதியின் குறைப்பே முக்கிய காரணமாகும். பொறி மற்றும் சாதனங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 5.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தொலைத்தொடர்பூட்டல் கருவிகளின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். போக்குவரத்துச் சாதனங்கள் மீதான இறக்குமதிச் செலவினமும் 4.8 சதவீதத்தினால் குறைவடைந்தமைக்கு முச்சில்லு வண்டிகள், வர்த்த ரீதியான வாடகை ஊர்திகள் மற்றும் பேருந்துகள் போன்ற வீதி ஊர்திகள் வழியமைத்தன. எனினும், கட்டட மூலப்பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்கு இம்மாத காலப்பகுதியில் காணப்பட்ட உயர்ந்த இரும்பு மற்றும் உருக்கு இறக்குமதிகளே காரணமாகும்.

2017 பெப்புருவரியில் நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 343 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 0.7 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தன. இதற்கு தனியாள் ஊர்திகள், வீட்டுச்சாதனங்கள், ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள் போன்ற உணவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி தூண்டுதலாக அமைந்தது. மாறாக, உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினம் கணிசமக அதிகரித்தமைக்கு அரிசி இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். 2017 பெப்புருவரியில் அரிசி இறக்குமதிகள், 2016 பெப்புருவரியில் அரிசி இறக்குமதி மீது உறப்பட்ட ஐ.அ.டொலர் 1 மில்லியனுக்கும் குறைவான பெறுமதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 36 மில்லியனுக்கு அதிகரித்தது.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முதலிரண்டு மாத காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 3,410 மில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் இது, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 12.6 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். இதற்கு எரிபொருள், தங்கம் மற்றும் அரிசி மீதான இறக்குமதிச் செலவுகள் வழிவகுத்தன. எனினும், இக்காலப்பகுதியில் புடவை மற்றும் புடவைப் பொருட்கள், ஊர்திகள், பொறிகள் மற்றும் சாதனங்கள் என்பன மீது உறப்பட்ட இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தது.

2017இன் முதல் இரண்டு மாத காலப்பகுதியில் இந்தியா, சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர் மற்றும் யப்பான் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 59 சதவீதத்திற்கு வகைகூறின.

## அட்டவணை 2 - இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)


| வகை | பெப்புருவரி 2016 (அ) (ஐ.அ.டொ. மில்) | பெப்புருவரி 2017 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-பெப் 2016 (ஆ) (ஐ.அ.டொ. மில்) | சன-பெப் 2017 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **345.6** | **343.2** | **(0.7)** | **689.1** | **702.0** | **1.9** |
| உணவு மற்றும் குடிபான்ங்கள் | 122.6 | 148.1 | 20.8 | 241.2 | 291.7 | 20.9 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 1.3 | 37.1 | 2,770.5 | 3.1 | 49.8 | 1,496.5 |
| மரக்கறிகள் | 37.5 | 28.1 | (25.1) | 81.8 | 66.8 | (18.4) |
| பால் உற்பத்திகள் | 19.9 | 26.5 | 33.5 | 37.9 | 47.6 | 25.5 |
| கடலுணவு | 19.3 | 14.1 | (26.6) | 35.2 | 32.3 | (8.2) |
| வாசனைத்திரவியங்கள் | 9.9 | 6.5 | (34.3) | 20.7 | 15.9 | (23.1) |
| எண்ணெய் மற்றும் கொழுப்பு | 1.8 | 3.2 | 83.7 | 4.7 | 7.5 | 61.0 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 33.0 | 32.6 | (1.3) | 57.8 | 71.8 | 24.3 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 223.0 | 195.1 | (12.5) | 447.9 | 410.3 | (8.4) |
| வாகனங்கள் | 64.5 | 51.3 | (20.4) | 151.4 | 117.3 | (22.5) |
| தொடர்பூட்டல் கருவிகள் | 15.9 | 20.7 | 30.1 | 33.3 | 42.8 | 28.2 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவை | 142.6 | 123.1 | (13.7) | 263.1 | 250.2 | (4.9) |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **724.0** | **907.4** | **25.3** | **1,525.2** | **1,857.5** | **21.8** |
| எரிபொருள் | 148.8 | 354.6 | 138.3 | 323.6 | 636.8 | 96.8 |
| அதில் மசகெண்ணெய் | 25.0 | 84.2 | 237.3 | 70.3 | 125.6 | 78.7 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 100.2 | 213.8 | 113.4 | 201.7 | 418.5 | 107.5 |
| நிலக்கரி | 23.7 | 56.6 | 139.1 | 51.7 | 92.7 | 79.5 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 38.9 | 54.4 | 40.1 | 63.6 | 123.4 | 94.2 |
| அதில் தங்கம் | 25.3 | 46.6 | 84.4 | 40.7 | 110.8 | 171.9 |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 225.0 | 186.6 | (17.1) | 475.9 | 439.6 | (7.6) |
| இரசாயன உற்பத்திகள் | 70.2 | 62.1 | (11.5) | 138.7 | 131.8 | (5.0) |
| அடிப்படை உலோகம் | 26.2 | 52.5 | 100.2 | 57.1 | 90.9 | 59.1 |
| உணவுத் தயாரிப்புக்கள் | 16.1 | 21.1 | 31.6 | 37.3 | 43.1 | 15.5 |
| கோதுமை மற்றும் சோளம் | 10.2 | 13.1 | 28.8 | 53.2 | 43.8 | (17.7) |
| வளமாக்கி | 16.4 | 9.0 | (45.5) | 28.2 | 13.1 | (53.5) |
| ஏனையவை | 172.2 | 153.9 | (10.6) | 347.5 | 334.9 | (3.6) |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **369.4** | **360.3** | **(2.5)** | **813.4** | **792.5** | **(2.6)** |
| பொறி மற்றும் கருவிகள் | 210.2 | 197.8 | (5.9) | 465.7 | 448.4 | (3.7) |
| கட்டடப் பொருட்கள் | 105.9 | 111.9 | 5.6 | 240.8 | 247.8 | 2.9 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 52.8 | 50.2 | (4.8) | 105.4 | 94.5 | (10.3) |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.5 | 0.4 | (28.0) | 1.4 | 1.8 | 26.5 |
| **4. வகைப்படுத்தப்படாதவை** | **0.3** | **0.2** | **(30.8)** | **0.8** | **57.5** | **6,976.0** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,439.3** | **1,611.2** | **11.9** | **3,028.4** | **3,409.6** | **12.6** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
லங்கா ஐஓசி பிஎல்சி
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

### வரைபடம் 1: ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம்




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

**வர்த்தக நிலுவை**

2017 பெப்புருவரியில் வர்த்தக நிலுவையின் பற்றாக்குறை 2016 பெப்புருவரியின் ஐ.அ.டொலர் 548 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 743 மில்லியனுக்கு கணிசமாக விரிவடைந்தது. 2017இன் முதல் இரண்டு மாத காலப்பகுதிக்கான ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறை 2016இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,238 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1,677 மில்லியனுக்குக் கணிசமாக அதிகரித்தது.

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**

2017 பெப்புருவரியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 197,517 இனைப் பதிவுசெய்து 2016 பெப்புருவரியின் வருகையான 197,697 உடன் ஒப்பிடுகையில், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 0.1 சதவீதமான எதிர்மறை வளர்ச்சியைப் பதிவுசெய்தது. சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட சிறிதளவு குறைப்பிற்கு சீனாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே பெருமளவிற்குக் காரணமாகும். மாறாக, இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜேர்மனியிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் அதிகரித்த வேளையில் பிரான்சிலிருந்தான வருகை இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்திநிலையத்தின் ஒடுபாதையின் செப்பனிடும் வேலைகளின் காரணமாக சில பறப்புக்கள் இரத்துச் செய்யப்பட்டமையும் சில பறப்புக்கள் மீள அட்டவணையிடப்பட்டமையும் 2017 பெப்புருவரியில் சுற்றுலா வருகையில் சில தாக்கங்களைக் கொண்டிருந்தன. 2017இன் முதலிரண்டு மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் காணப்பட்ட முக்கிய பண்பு யாதெனில் கிழக்கு ஐரோப்பிய பிராந்தியத்திலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியிருப்பதாகும். சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக சுற்றுலாவிலிருந்தான[1] வருவாய்கள் 2017 பெப்புருவரியில் ஐ.அ.டொலர் 338.9 மில்லியனால் வீழ்ச்சியடைந்தன.

---

1 இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அதன் சராசரித் தங்கியிருக்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரிச் செலவு தொடர்பான 2017ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் பற்றிய அளவீட்டினை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்படும்.

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**

2017 பெப்புருவரியில் தொழிலாளர் பணவலுப்பல்களிலிருந்தான பெறுகைகள் தொடர்ந்தும் மிதமாகக் காணப்பட்டன. 2017 பெப்புருவரி காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான பெறுகைகள் ஐ.அ.டொலர் 568.7 மில்லியனாக விளங்கி, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2.6 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைப் பதிவுசெய்தன. மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் மோசமான பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் நிலைமைகளின் காரணமாக தொழிலாளர் பணவனுப்பல்களில் காணப்படும் குறைந்த வளர்ச்சி இன்னும் சில காலத்திற்குத் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது.

**நிதியியல் பாய்ச்சல்கள்**

இம்மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 255.9 மில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க தேறிய வெளிப்பாய்சச்ல்களின் காரணமாக, அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான தேறிய வெளிப்பாய்ச்சல் போக்கு பெப்புருவரியிலும் தொடர்ந்தது. மேலும், அரசிற்கான நீண்ட காலக் கடன்கள் ஐ.அ.டொலர் 57.6 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்ததுடன் இம்மாத காலப்பகுதியில் கடன் மீள்கொடுப்பனவுகள், ஐ.அ.டொலர் 91.6 மில்லியன் கொண்ட கடன் உட்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 149.2 மில்லியனாக விளங்கின. எனினும், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள், முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 14.2 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல் மற்றும் இரண்டாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 43.0 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல் என்பனவற்றின் காரணமாக ஐ.அ.டொலர் 57.2 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன.

**திரண்ட சென்மதி நிலுவை நிலைமை**

2017 பெப்புருவரியுடன் முடிவடைந்த ஆண்டு காலப்பகுதிக்கான திரண்ட சென்மதி நிலுவை 2016 பெப்புருவரி இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 534.0 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 258.3 மில்லியன் கொண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

**பன்னாட்டு ஒதுக்குகளும் செலாவணி வீத அசைவுகளும்**

2017 பெப்புருவரி இறுதியில் இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 5.6 பில்லியனாக விளங்கி 3.4 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்ட வேளையில் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 7.8 பில்லியனாக விளங்கி 4.7 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்டது.

2016இல் ஐ.அ.டொலருக்கெதிராக 3.8 சதவீதத்தினால் தேய்வடைந்த இலங்கை ரூபா 2017 மே 23 வரையான ஆண்டு காலப்பகுதியில் 1.8 சதவீதத்தினால் மேலும் தேய்வடைந்தது. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2017 மே 23 வரையான ஆண்டுப்பகுதியில் ரூபாவானது யூரோவிற்கெதிராக 8.0 சதவீதத்தினாலும் இந்திய ரூபாவிற்கெதிராக 6.7 சதவீதத்தினாலும் ஸ்டேர்லிங் பவுணுக்கெதிராக 7.1 சதவீதத்தினாலும் யப்பானிய யென்னுக்கெதிராக 6.2 சதவீதத்தினாலும் அவுத்திரேலிய டொலருக்கெதிராக 5.1 சதவீதத்தினாலும் கனடிய டொலருக்கெதிராக 1.7 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது.

### அட்டவணை 3: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு [அ]

| வகை | பெப்புருவரி 2016 ஐ.அ.டொ. மில் | பெப்புருவரி 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - பெப் 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | சன - பெப் 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 891.6 (ஆ) | 867.8 | -2.7 | 1,790.2 (ஆ) | 1,732.5 | -3.2 |
| இறக்குமதிகள் | 1,439.3 | 1,611.2 | 11.9 | 3,028.4 | 3,409.6 | 12.6 |
| வர்த்தக மீதி (மிகை (+) குறை (-)) | -547.7(ஆ) | -743.4 | 35.7 | -1,238.2(ஆ) | -1,677.0 | 35.4 |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் (ஆ) | 339.2(ஆ) | 338.9 | -0.1 | 672.5(ஆ) | 715.2 | 6.4 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 554.2 | 568.7 | 2.6 | 1,117.6 | 1,140.3 | 2.0 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (இ) | 8.8 | 57.2 | 551.1 | -10.1 | 46.2 | 557.4 |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (ஈ) | 53.8(ஆ) | 223.0 | 314.8 | 144.2(ஆ) | 438.3 | 203.9 |
| இதில், | | | | | | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 9.7 | 129.9 | 1,234.2 | 23.0 | 212.8 | 826.5 |
| நீண்ட காலக் கடன்கள் | 43.9(ஆ) | 91.6 | 108.8 | 116.5(ஆ) | 223.6 | 91.9 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

(அ) தற்காலிகமானது.

(ஆ) திருத்தப்பட்டது.

(இ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஈ) அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான மூலதனம் மற்றும் நடைமுறை மாற்றல்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் விற்பனையிலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கத்தின் கூட்டுக் கடன்கள் மற்றும் நீண்ட காலக் கடன்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.